கேட்பதுதான் சரியில்லை என்ற வகையில் முடிவு எடுத்து இருக்கிறோம். நான் சொல்ல விரும்புவது, அந்தப் பள்ளி பற்றியே எனக்குப் புகார் வந்து இருக்கிறது. அந்தப் பள்ளியில் உள்ள வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு ஆசிரியரைப் பற்றி நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி போன்று அத்தனை உறுப்பினர்களும் வலுயுறுத்திக் கேட்க ஆரம்பித்தால், நேரம்போதாது. புகார் வரப்பெற்றுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கொடுப்பது என்பது இயலாது. நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால்தான், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு மட்டும் துணை வினா கேட்க வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அவர் துணைவினா கேட்டு விளக்கம் பெற்று விட்டார்.

திரு. சோ. அழகர்சாமி : அந்த ஆசிரியர் இரண்டு மாதகாலமாக வேலை இல்லாமல் இருக்கிறார். தயவு செய்து தாங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். புறம்போக்கு நிலங்கள் பற்றிய கேள்வி வந்தபோது, அதற்காக 20 நிமிடங்கள் தரப்பட்டது. அது பொதுவான கேள்வி. ஆனால் இந்தக் கேள்வி ஒரு தொகுதி சம்பந்தப்பட்டது. சம்மந்தப்பட்ட உறுப்பினர் வினா எழுப்பி விட்டார். உட்காருங்கள். வினா எண். 163.

பெரியாறு, சுருளியாறு பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பிராந்தியப்படி.

*வினா எண். 163—திரு. வெ. இரா. ஜெயராமன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பெரியாறு, சுருளியாறு மின்திட்ட கீழ் முகாம்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிராந்தியப்படி வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை (Isolated locality Allowance) வழங்க எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

1979 பிப்ரவரி 24]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, மலைப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பிராந்தியப் படி வழங்குவதற்கு அரசு உத்தரவிட்டும், கோவை மாவட்டம் பரளி மின்நிலைய பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப் படவில்லை. அரசு உத்தரவிட்ட பின்பும் வழங்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக்கேள்வி போடவும்.

ஏ.சி.சி. சிமெண்ட் கம்பெனியிடமிருந்து உள்ளூர் மேல்வரி வசூலித்தல்.

*வினா எண். 164—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் கம்பெனியார் மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திற்கு செலுத்த வேண்டிய உள்ளூர் மேல் வரி (லோகல் சர்சார்ஜ்) பாக்கி எவ்வளவு?

(ஆ) அதனை வசூலிக்க எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—

(அ) ரூ. 40,10,268·36.

(ஆ) தலைமை நீதிமன்றம், முக்கியப் பிரச்சினை குறித்து இறுதி முடிவுகள் எடுக்கும்வரை, உள்ளூர் மேல்வரி நிலுவைத் தொகைகளை வசூலிப்பதிலிருந்து அரசைத் தடைசெய்யும் வகையில் சென்னை உயர்நீதி மன்றத்தில்—கம்பெனி பல மனுக்களைத் தாக்கல் செய்து, தடை ஆணைகளையும், உறுத்துக் கட்டளைகளையும் (Injection) பெற்றுள்ளது.

[முற்பகல் 9·40]

திரு. ஆ. நடராசன் : தலைவரவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளுடைய உள்ளூர் மேல் வரி நீதிமன்றத்தில் தடை காரணமாக தடைப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த நடப்பாண்டில் புறம்போக்கு இடங்களில் கல் உடைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்போது நடைமுறையில் இருக்கிற விதிப்படி உள்ளூர் மேல் வரி வசூல் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நிச்சயமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.